[1993 அக்டோபர் 29

(ஆ) சங்கரன்கோவில் ஒன்றியம் வடக்கு ஆலங்குளம் வழியாக திருவேங்கடம் சென்றுகொண்டிருந்த பேருந்து நிறுத்தப்பட்டதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திரு ஆர். சிங்காரம் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு ஆர். சிங்காரம்.

திரு ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''சங்கரனகோவில் ஒன்றியம், வடக்கு ஆலங் குளம் வழியாகத் திருவேங்கடம் சென்று கொண்டிருந்த கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகப் பேருந்து நிறுத்தப் பட்டது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன.

பிற்பகல் 12-15

*மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்பு மிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை.

தேவையான பேருந்துகள் அங்கே இயக்கப்பட்டு வருகின்றன. கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகப் பேருந்து ஒன்று 8—8—1993 வரை தென்காசியிலிருந்து புளியங்குடி, வடக்கு ஆலங்குளம், சங்கரன்கோயில் வழியாக திருவேங்கடத்திற்கு 2 சுற்றுக்களும், தென்காசியிலிருந்து புளியங்குடி, வடக்கு ஆலங்குளம் வழியாக சங்கரன் கோவிலுக்கு 6 சுற்றுக்களும் இயக்கப்பட்டு வந்தது. அதில் திருவேங்கடம் செல்லும் சுற்றுக்களில் பயணிகள் பயண விகிதாச்சாரம் மிகவும் குறைவாக இருந்ததாலும், திரு வேங்கடம் செல்ல நேரடி பயணிகள் இல்லாததாலும், மேற்படி பேருந்தை 9—8—1993 முதல் தென்காசியிலிருந்து புளியங்குடி, வடக்கு ஆலங்குளம், சங்கரன்கோவில் வழியாக சிவகிரிக்கு 4 சுற்றுக்களும், தென்காசியிலிருந்து புளியங்குடி, வடக்கு ஆலங்குளம் வழியாக சங்கரன்கோயில் வரையில் 2 சுற்றுக்களும் இயக்கப்பட்டு வருகிறது. சங்கரன்கோவிலி லிருந்து திருவேங்கடம் செல்ல மிகுந்த அளவு பேருந்து வசதிகள் உள்ளன. மேலும் வடக்கு ஆலங்குளம் பகுதி

மக்களின் முக்கிய கோரிக்கையான அருகில் உள்ள சங்கரன்கோவிலுக்கும், புளியங்குடிக்கும் முன்பு இயக்கப் பட்ட 8 சுற்றுக்களும் வேண்டும் என தெரிவிக்கப்பட்டதால் 30-10-1993 முதல் புளியங்குடியிலிருந்து வடக்கு இலங் குளம் வழியாக சங்கரன்கோவிலுக்கு மேலும் 2 சுற்றுககள் வேறொரு பேருந்தைக் கொண்டு சிவகிரி வட்டாட்சியர் கூட்டிய சமாதான கூட்டத்தின் முடிவின்படி இயக்கப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கும் இன்று காலையில் தொலைபேசி மூலமாக பஸ் இயக்கப்படுவதாக தகவல் வந்துவிட்டது. சட்டெனச் சொன்னால் சிட்டெனப் பறந்து செயல்படும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும், நம் முடைய தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(இ) தொப்பூர் தேசிய நெடுஞ்சாலை ஏழாம் எண் மலைப்பாதை யில் வாகனங்கள் பழுதடைந்தால் போக்குவரத்துத் தடை ஏற்படுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திரு. க. அர்ச்சுனன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார். திரு க. அர்ச்சுனன்.

திரு க. அர்ச்சுனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தொப்பூர் தேசிய நெடுஞ்சாலை எண் 7 மலைப் பாதையில் வாகனங்கள் பழுதடைந்தால் ஏற்படும் போக்கு வரத்துத் தடை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

*மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்பு மிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட விவர அறிக்கை பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை.

தொப்பூர் அருகே மலைப்பாதையில் செல்லும் தேசிய நெடுஞ்சாலை எண் 7-ல், ஓசூர்—அதியமான்கோட்டை தொப்பூர்—மேட்டூர் செல்லும் நெடுஞ்சாலைகள் கூடுவதால்